# <u>இராசிபுரம் நகராட்சி</u>

## <u>நகர்மன்ற சிறப்புக் கூட்ட அறிவிப்பு</u>

2026–ஆம் வருடம் மார்ச் மாதம் 12–ஆம் தேதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இராசிபுரம் நகராட்சியின் சிறப்புக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அது சமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் 10.03.2026

தலைவர்,
நகர் மன்றம்

## <u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சியில் 31.01.2026–ஆம் தேதியன்று இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட தூய இருதய அரசு மேல்நிலைப்பள்ளியில் "நலன் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாம் நடைபெற்றது. மேலும் 04.02.2026–ஆம் தேதியன்று சுஜிதா திருமண மண்டபத்தில் சமூக பாதுகாப்பு திட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் நலத்திட்டப்பணிகள் மற்றும் உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இவ்விரு நிகழ்ச்சிகளும் சுமார் 3200 பயனாளிகள் மற்றும் 100–க்கும் மேற்பட்ட அரசு அலுவலர்கள் பங்கு பெற்றனர். இந்நிகழ்ச்சிகளுக்கு பயனாளிகளுக்கு தேவையான தேநீர், குடிநீர் பாட்டில், பிஸ்கெட் வழங்குவதற்கும் நலன் காக்கும் முகாமிற்கு தடையில்லா மின்சாரம் வழங்க ஜெனரேட்டர் பொருத்தவும், சுமார் 400 மருத்துவப் பணியாளர்களுக்கு மதிய உணவு வழங்கவும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததன் பேரில் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் 26.01.2026 அன்று நடைபெற்ற குடியரசு தின விழாவிற்கு நகராட்சி அலுவலகத்திற்கு மின்விளக்கு அலங்காரம் செய்யப்பட்டது மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தன் பேரில் நகராட்சிப் பகுதியில் 15 இடங்களில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் "உங்க கனவை சொல்லுங்க பேனர்கள்" வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட செலவினத்தை அவசர அவசியம் கருதி செய்தமைக்கு மன்ற அனுமதி பெற்று தொகை வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | செலவிடப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| 1 | நலன் காக்கும் ஸ்டாலின் முகாமிற்கு 20 டேபிள், 20 சேர், 63 KW ஜெனரேட்டர் மற்றும் வண்டி வாடகை ஆகியவற்றிற்கு செலவிடப்பட்டது. | 19900 |
| 2 | நலன் காக்கும் ஸ்டாலின் முகாமிற்கு வந்த மருத்துவ பணியாளர்களுக்கு மதிய உணவு வழங்கியது (400 நபர்களுக்கு). | 28000 |
| 3 | சுஜிதா திருமண மண்டபத்தில் நடைப்பெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் முகாமிற்கு வருகை தந்த பயனாளிகள் மற்றும் அலுவலர்களுக்கு தேநீர், குடிநீர் பாட்டில், பிஸ்கெட் வழங்கியது. | 16450 |
| 4 | குடியரசு தின விழாவிற்கு இராசிபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு மின்விளக்கு அலங்காரம் செய்தது. | 4500 |
| 5 | மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் "உங்க கனவை சொல்லுங்க" பேனர்கள் வைத்தது (15 எண்ணிக்கை) | 4500 |
| | **மொத்தம்** | **73350** |

<u>அலுவலகக்குறிப்பு :</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்டத் தொகை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை வழிகாட்டுதலின்படி Section 57(7) பணி செய்தமைக்கு அனுமதிக்கலாம்.

(0259/26/இ1)

**தீர்மானம் எண். 859**

மன்றம் அனுமதிக்கின்றது.

(2) இராசிபுரம் நகராட்சிக்கு 27--ஆவது உயர்மட்டக்குழு ஆய்வுக்கூட்டத்தில் நகர்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2025-26 (UIDF) வார்டு - D, பிளாக் **No.8,** டவுன் சர்வே எண். ½ **(Part)-**இல் தட்டான் குட்டை ரோட்டில் அறிவுசார் மையம் மற்றும் நூலகம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இப்பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 07.01.2026-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 06.02.2026-ஆம் தேதியன்று பணியானை வழங்கப்பட்டுள்ளது. மேலும் அறிவுசார் மையம் மற்றும் நூலகம் கட்டுதல் பணிக்கு தட்டான்குட்டை ரோடு அணுகுசாலையாக உள்ளது. இப்பகுதியில் இந்நகராட்சிக்கு உரக்கிடங்கிற்கு செல்லும் லாரிகளினால் அதிக போக்குவரத்து நெரிசல் ஏற்படும் வகையில் உள்ளது. மேலும் தட்டான்குட்டை ரோட்டில் மேல்புறம் மூன்று டாஸ்மாக் ஒயின்ஷாப் செயல்பட்டு வருகிறது.

தற்போது நகர்மன்றத்தலைவர் அவர்கள், உழவர் சந்தை வழியாக அணுகுசாலை அமைக்க வேண்டுமென வேண்டுகோள் வைத்துள்ளார்கள். அதனடிப்படையில் வேளாண்மை துறையின் கட்டிடத்தின் மேற்குப்பகுதியில் (வார்டு - D, பிளாக் **No. 8,** சர்வே எண். **½ (Part)-**இல் பக்கத்திறவிடம் 1.00 m. (3'3") அடி திறவிடப்பகுதியை நிலை நிறுத்தி, 6'10 m (20') அகலத்திற்கு, 96.00 மீ. (315') நீளத்திற்கு அணுகு சாலைக்காக இடத்தை நகராட்சிக்கு சாலை உபயோகத்திற்காக மேற்கண்ட நகராட்சிக்கு இடத்தை திறந்து விட வேளாண்மைத்துறை துணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் அனுமதி கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது நடைபாதை அமையும் இடத்தில் ஆண்கள் இலவச சிறுநீர் கழிப்பறை 15 எண்ணிக்கை உள்ளது. இப்பாதைக்கு தேவையான இரண்டு சிறுநீர் கழிப்பறை மற்றும் தடுப்பு சுவர் ஆகியவற்றை இடித்தால் மட்டுமே அணுகுசாலை அமைக்க முடியும். எனவே மேற்கண்ட இரண்டு சிறுநீர் கழிப்பறை மற்றும் தடுப்பு சுவரை இடிப்பதற்கு உரிய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. உரிய அலுவலரின் அனுமதி பெற கருத்துரு அனுப்பலாம்.

(2219/2024/இ1)

**தீர்மானம் எண். 860**

சிறுநீர் கழிப்பறை **15** எண்ணிக்கை கொண்டது. அதில் **3** எண்ணிக்கை மட்டுமே அறிவுசார் மையம் நுழைவாயிலுக்காக, அகற்ற மன்றம் அனுமதிக்கின்றது.

(3) இராசிபுரம் நகராட்சியில் உள்ள பொறியியல் பிரிவில் கீழ்க்கண்ட குடிநீர் லாரிகளுக்கு தகுதிச்சான்று (FC) **18.03.2026** தேதியுடன் முடிவடைவதால் குடிநீர் லாரியில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்து புதுப்பிக்க வேண்டியது அத்தியாவசியமாகிறது. எனவே குடிநீர் லாரியின் தகுதிச்சான்று (FC) புதுப்பிக்க பழுதுகளை சரி செய்ய அரசு அனுமதி பெற்ற TVS Mobility Private Limited பணிமனையில் விலைப்புள்ளி கோரி பெறப்பட்ட விவரம் கீழ்கண்டவாறு. அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள செலவினத்தொகைக்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **வண்டி எண்** | **செலவினம் ரூ.** |
|---|---|---|
| 1 | TN 28 BZ 9021 (6000 லி.) | 145500 |
| 2 | TN 28 BZ 8975 (12000 லி.) | 120750 |

**அலுவலகக்குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(0210/26/இ2)

**தீர்மானம் எண். 861**

மன்றம் அனுமதிக்கின்றது.

(4) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் அரசாணை நிலை எண். 97 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.02.2007 மற்றும் நகராட்சி நிருவாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 748/2008/குவ2, நாள் 21.09.2009–இன்படி புதியதாக குடிநீர் இணைப்பு பெறுபவர்களிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சாலை பராமரிப்புக் கட்டணம் முந்தைய ஆண்டிலிருந்து 5% உயர்த்தி வசூல் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்கும் போது சாலை பராமரிப்புக்கட்டணம் கீழ்க்கண்டவாறு 5% 01.04.2026 முதல் உயர்த்தி வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ. எண்.** | **சாலை விவரம்** | **01.04.2025 முதல் வசூலிக்கப்படும் கட்டணம்** | **01.04.2026 முதல் வசூலிக்கப்பட வேண்டிய கட்டணம்** |
|---|---|---|---|
| 1 | **கருங்கல் ஜல்லி சாலை** | | |
| | 30 மீட்டர் நீளத்திற்கு | ரூ.2300/- | ரூ.2415/- |
| | 30 மீட்டர் முதல் 90 மீட்டர் நீளத்திற்கு | ரூ.3732/- | ரூ.3920/- |
| 2 | **தார்சாலை** | | |
| | 30 மீட்டர் நீளத்திற்கு | ரூ.4916/- | ரூ.5162/- |
| | 30 மீட்டர் முதல் 90 மீட்டர் நீளத்திற்கு | ரூ.6242/- | ரூ.6560/- |
| 3 | **சிமெண்ட் சாலை** | | |
| | 30 மீட்டர் நீளத்திற்கு | ரூ.5674/- | ரூ.5958/- |
| | 30 மீட்டர் முதல் 90 மீட்டர் நீளத்திற்கு | ரூ.7009/- | ரூ.7360/- |

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

( 0265/26/இ2)

**தீர்மானம் எண். 862**

அங்கீகரிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சியில் வார்டு எண். 1 முதல் 13 வரையுள்ள பகுதியில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் ஆழ்துளைக்கிணற்றில் இருந்து செல்லும் உப்புநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரிசெய்தல் பணிக்கு நகர் மன்றத் தீர்மான எண். 819 நாள் 13.02.2026-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. 5,00,000/- என்ற மதிப்பீட்டிற்கு 03.03.2026-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | திரு.N. செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | -0.04% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திருமதி R.ஷாகிதா, ஒப்பந்ததாரர், இராசிபுரம் | 0.52% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விடக் குறைவான -0.04% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு N.செல்லப்பன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026 நன்னடத்தை விதி விரைவில் அமல்படுத்த உள்ளதால் குடிநீர் பணிகள் அவசரம் கருதி நகர் மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரருக்கு பணியாணை வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(3238/25/இ2)

**தீர்மானம் எண். 863**

மன்றம் அனுமதிக்கின்றது.

(6) இராசிபுரம் நகராட்சியில் வார்டு எண். 14 முதல் 27 வரையுள்ள பகுதியில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் ஆழ்துளைக்கிணற்றில் இருந்து செல்லும் உப்புநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரிசெய்தல் பணிக்கு நகர் மன்றத் தீர்மான எண். 820 நாள் 13.02.2026-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. 5,00,000/- என்ற மதிப்பீட்டிற்கு 03.03.2026-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | M/S ஹர்சிதா கன்ஸ்ட்ரக்ஷன், சேந்தமங்கலம் | -0.04% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M .P.கான்ட்ராக்டர், இராசிபுரம் | 0.52% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிடக் குறைவான -0.04% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. ஹர்சிதா கன்ஸ்ட்ரக்ஷன், சேந்தமங்கலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026 நன்னடத்தை விதி விரைவில் அமல்படுத்த உள்ளதால் குடிநீர் பணிகள் அவசரம் கருதி நகர் மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரருக்கு பணியாணை வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(3239/25/இ2)

**தீர்மானம் எண். 864**

மன்றம் அனுமதிக்கின்றது.

( 7 ) இராசிபுரம் நகராட்சியில் வார்டு எண். 14–இல் உள்ள தினசரி சந்தை நியாய விலைக்கடை அமைக்கும் கட்டிடத்தின் அடிப்புறம் செல்லும் குழாய் 200 mm DI Pipe இடம் மாற்றி அமைத்தல் பணிக்கு நகர் மன்றத் தீர்மான எண். 828 நாள் 13.02.2026-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. 1,45,000/- என்ற மதிப்பீட்டிற்கு 03.03.2026-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | திரு N. செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | -0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திருமதி R.ஷாகிதா, ஒப்பந்ததாரர், இராசிபுரம் | 0.72% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிடக் குறைவான -0.03% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு N.செல்லப்பன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 நன்னடத்தை விதி விரைவில் அமல்படுத்த உள்ளதால் குடிநீர் பணிகள் அவசரம் கருதி நகர் மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரருக்கு பணியாணை வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(004/26/இ2)

**தீர்மானம் எண். 865**

மன்றம் அனுமதிக்கின்றது.

(8) இராசிபுரம் நகராட்சியில் வார்டு எண். 27–இல் காமராஜர் பகுதியில் குடிநீர் விநியோக குழாய்கள் 90 mm HDPE Pipe 60 மீட்டர் அமைத்தல் பணிக்கு நகர் மன்றத் தீர்மான எண். 827 நாள் 13.02.2026-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. 40,000/- என்ற மதிப்பீட்டிற்கு 03.03.2026-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | திரு N. செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் | -0.34% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திருமதி R.ஷாகிதா, ஒப்பந்ததாரர், இராசிபுரம் | 3.18% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிடக் குறைவான -0.34% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு N. செல்லப்பன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(005/26/இ2)

**தீர்மானம் எண். 866**

மன்றம் அனுமதிக்கின்றது.

(9) இராசிபுரம் நகராட்சியில் அம்மா உணவகத்தில் புதிய மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி மற்றும் விநியோகக்குழாய்கள் அமைத்தல் பணிக்கு நகர் மன்றத் தீர்மான எண். 829 நாள் 13.02.2026-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. 60,000/- என்ற மதிப்பீட்டிற்கு 03.03.2026-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | M/S ஹர்சிதா கன்ஸ்ட்ரக்ஷன், சேந்தமங்கலம் | -0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M .P.கான்ட்ராக்டர், இராசிபுரம் | 0.06% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிடக் குறைவான -0.03% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. ஹர்சிதா கன்ஸ்ட்ரக்ஷன், சேந்தமங்கலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(006/26/இ2)**

**தீர்மானம் எண். 867**

மன்றம் அனுமதிக்கின்றது.

**( 10 )** இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் எஸ்.ஆர். எண்டர்பிரைசஸ் என்ற தனியார் நிறுவனம் மூலமாக தூய்மைப்பணி வார்டு எண். **1** முதல் **27** வரை நல்லமுறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், வரும் **30.04.2026**–ஆம் தேதியில் மேற்படி பணி அதற்கான ஒப்பந்தம் உரிமம் நிறைவடைகிறது. மேலும், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் எதிர்வரும் மே **2026** மாதம் நடைபெற உள்ளதால் அதற்கான முன்னேற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஆகையால், எதிர் வரும் தேர்தல் நன்னடத்தை விதிகளை கருத்திற்கொண்டும் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் **01.05.2026**–க்கு பின்பு ஒப்பந்த நிபந்தனைகளின்படியும் (Tender Conditions, Bid Document) Agreement–இன்படியும் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களால் வழங்கப்படும் வழிகாட்டுதல்களின்படி, மேற்படி பணிகளை இந்நகராட்சியில் தொடர்ந்து மேற்கொள்ளவும் கணக்கீட்டின்படி அதற்காகும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தினை வருவாய் நிதி மற்றும் SUC நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(3899/2022/எச்1)**

**தீர்மானம் எண். 868**

S.R. Enterprise என்ற தனியார் நிறுவனம் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள **01.05.2026** முதல் **30.07.2026** வரை மன்றம் அனுமதிக்கின்றது.

**(11)** மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரைக்கிளை வழக்கு எண். W.P.(MD) எண். **29035, 29217** மற்றும் **30354/2024**–இல் பிறப்பித்த ஆணைக்கிணங்கவும், அரசாணை (MS) எண். **629** வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நிலங்கள் ஒப்படைப்பு பிரிவு (LD4(1)) நாள்**16.09.2025**–ற்கிணங்கவும், வருவாய் துறை மற்றும் காவல் துறையால் அரசியல் கட்சிகள் மற்றும் சங்கத்தினர் கூட்டங்கள், தேர்தல் பிரச்சாரம், மாநாடுகள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டம் மற்றும் தர்ணா ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கும்போது தற்காலிகமாக நகராட்சி சாலைகளில் கொடிகம்பங்கள் நடுவதற்கு இந்நகராட்சி மூலம் கட்டணம் வசூல் செய்ய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் **09.03.2026**–ஆம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட தற்காலிக கொடிக்கம்பம் இந்நகராட்சி சாலையில் நடுவதற்கும் அனுமதி காலம் முடிவுற்றவுடன் சம்மந்தப்பட்ட நபரே அகற்றிக்கொள்ள நாள் ஒன்றுக்கு ஒரு கொடி கம்பத்திற்கு ரூ. **10/–** வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அரசாணை (MS) எண். **629** வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நிலங்கள் ஒப்படைப்பு பிரிவு (LD4(1)) நாள் **16.09.2025**–இன்படியும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்

09.03.2026–ஆம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் அறிவுரையின்படியும், மேற்கண்ட கட்டணம் வசூல் செய்ய மன்றம் முடிவு செய்யலாம். மேலும், நகரில் நிறுவப்படும் தற்காலிக டிஜிட்டல் பேனர்களுக்கு 1998–ஆம் வருட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் மற்றும் 2023–ஆம் வருட விதிகளின்கீழ் வசூல் செய்யவும் மன்றம் முடிவு செய்யலாம்.

(32/16/எப்1)

**தீர்மானம் எண். 869**

கொடி கம்பம் ஒன்றுக்கு ரூ. 10–ம், டிஜிட்டல் பேனர்களுக்கு ரூ. 1000–ம் மற்றும் 7 (ஏழு) நாட்களுக்குள் அகற்றிக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கின்றது.

( 12 ) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குள் சர்வே வார்டு – A, பிளாக் – 6, நகரளவு எண்கள். 116/1,116/3,121 மற்றும் 122–இல், 3037 சதுரமீட்டர் பரப்பளவு இடத்தில் பழைய பேருந்து நிலைய வளாகத்தில், இந்நகராட்சியிலிருந்து புதியதாக வணிக வளாகம் கடைகள் மற்றும் வாகன நிறுத்துமிடம் கட்டப்பட்டு வருவதில் சில மாற்றங்கள் இருப்பதால், நகர் ஊரமைப்புத் துறையில் திருத்திய வரைபட அனுமதி பெற கீழ்க்கண்டப் பணிகள் செய்வதற்கு, வலைதள இணையத்தில் பதிவேற்றம் செய்ய இந்நகராட்சி பதிவுபெற்ற பொறியாளர்களிடமிருந்து, இவ்வலுவலக ந.க.எண். 4368/22/எப்1, நாள் 03.11.2025–இல் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட மூன்று நபர்களிடமிருந்து நாள் 07.11.2025 –இல் விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | வேலைக்கான விவரம் | பதிவு பெற்ற பொறியாளர்கள் பெயர் மற்றும் முகவரி | வேலை செய்வதற்கான தொகை விவரம் | குறைவான விலைப்புள்ளி வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | Preparation Of Auto cad Plan 1 Sqm. | 1. M/s. Raasi Building Designers, Er. Navin Prasad M.E, (Reg.No.053/LS/2021/0006) 46,47 Town Bank Street, Rasipuram 637 408. | ரூ. 35/ Sqm. | M/S. Hari Constructions, Er. P.K Hariharan, B.E., Registered Engineer (Reg.No.053/LS/2019/1027) 15, V.Nagar Road No14, Rasipuram, 637 408. தொகை – ரூ.33/ 1 Sqm. |
| | | 2. M/S. Hari Constructions, Er. P.K Hariharan, B.E., Registered Engineer (Reg.No.053/LS/2019/1027) 15, V.Nagar Road No.14, Rasipuram 637 408. | ரூ..33/ Sqm. | |
| | | 3. M/.s Aravind Associates, Er. A. Prakash B.E., Registered Engineer (Reg.No.053/LS/2024/00001. 104.Town Bank Street, Rasipuram, 637 408. | ரூ .38/ Sqm. | |
| 2 | Preparation Of Colour coding work for Plan 1 sqm. | 1. M/s Raasi Building Designers, Er. Navin Prasad M.E, (Reg.No.053/LS/2021/0006) 46,47 Town Bank Street,Rasipuram 637 408. | ரூ. 18/ Sqm. | M/S. Hari Constructions, Er. P.K Hariharan, B.E., Registered Engineer (Reg.No.053/LS/2019/1027) 15, V.Nagar Road No14, Rasipuram, 637 408. தொகை – ரூ.16.50 / 1 Sqm. |
| | | 2. M/S Hari Constructions, Er. P.K Hariharan, B.E., Registered Engineer (Reg.No.053/LS/2019/1027) 15, V.Nagar Road No14, Rasipuram, 637 408. | ரூ. 16.50/ Sqm. | |
| | | 3. M/s Aravind Associates, Er. A. Prakash B.E., Registered Engineer (Reg.No.053/LS/2024/00001. 104.Town Bank Street, Rasipuram, 637 408. | ரூ. 17.00/Sqm. | |
| 3 | Online uploading scrutiny | 1. M/s. Raasi Building Designers, Er. Navin Prasad M.E, (Reg.No.053/LS/2021/0006) 46,47 Town Bank Street, Rasipuram 637 408. | ரூ.7.20/ Sqm | M/S. Hari Constructions, Er. P.K Hariharan, |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2. M/S. Hari Constructions, Er. P.K Hariharan, B.E., Registered Engineer (Reg.No.053/LS/2019/1027) 15, V.Nagar Road No.14, Rasipuram, 637 408. | ரூ.**6.40**/ Sqm | B.E., Registered Engineer (Reg.No.053/LS/2019/1027) 15, V. Nagar Road No.14, Rasipuram, 637 408. தொகை – ரூ.**6.40** /**1** Sqm. |
| | | 3. M/s. Aravind Associates, Er. A. Prakash B.E., Registered Engineer (Reg.No.053/LS/2024/00001. 104.Town Bank Street, Rasipuram, 637 408. | ரூ.**7.00**/ Sqm. | |

மேற்கண்ட அட்டவணையின்படி **Er. P.K Hariharan, B.E.,** பதிவுபெற்ற நகராட்சி பொறியாளர் என்பவரால் விலைப்புள்ளி குறைவாக கொடுக்கப்பட்டுள்ளதால் அன்னாருக்கு மேற்கண்டப்பணிகள் மேற்கொள்ள ஆணை வழங்கியதற்கும் மற்றும் அதற்கான செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த விலைப்புள்ளி கொடுக்கப்பட்ட **Er. P.K Hariharan, B.E.,** நகராட்சியில் பதிவுபெற்ற பொறியாளரை நியமனம் செய்து பணியாணை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(4368/22/எப்1)**

**தீர்மானம் எண். 870**

மன்றம் அனுமதிக்கின்றது.

**( 13 )** இந்நகராட்சி **4**–ஆவது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு ந. பழனிசாமி அவர்களின் **25.02.2026**–ஆம் தேதிய கடிதத்தில் நகர்மன்றக் கூட்ட அரங்கில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் அவர்களின் புகைப்படம் வைக்க தீர்மானம் நிறைவேற்றி தரும்படி தெரிவித்துள்ளார்.

அதன்படி மேற்காணும் கடிதம் பரிசீலணை செய்யப்பட்டதில், உருவப்படங்கள் அரசு அலுவலகங்கள் மற்றும் கட்டிடங்களில் தலைவர்கள் மற்றும் பெரியோர்களுடைய உருவப்படங்களை வைப்பது குறித்து அரசாணை (நிலை) எண். **457** பொது (பொது–**1**) துறை, நாள் **04.06.2006**–இல் அறிவுரைகள் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் அவர்களின் திருவுருவப் படத்தை நகர் மன்ற கூட்ட அரங்கில் வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

மேற்கண்ட அரசாணையின்படி டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் அவர்களின் திருவுருவப் படத்தை நகர் மன்ற கூட்ட அரங்கில் வைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(403/2026/எப்)**

**தீர்மானம் எண். 871**

மன்றம் அனுமதிக்கின்றது.

**( 14 )** இணை இயக்குநர் (கண்காணிப்பு), நகராட்சி நிருவாக இயக்குநரகம், சென்னை அவர்களால் **17.11.2025**–ஆம் தேதி இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட திட்டப் பணிகள், தட்டான் குட்டை சாலையில் உள்ள உரக்கிடங்கு, நுண்ணுயிர் செயலாக்க மையம் மற்றும் வளமீட்பு மையம் ஆகியவை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்பொழுது இரண்டு நுண்ணுயிர் மைய தொட்டியிலிருந்து வெளியேறும் உரக்கலவை நீர் சேகரிக்கப்படாமல் திறந்த வெளியில் செல்வதால் அதற்கு கழிவுநீர் சேகரிப்புத்தொட்டி அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, இரண்டு நுண்ணுயிர் மைய செயலாக்க மையத்திற்கும் மூடியுடன் கூடிய கழிவுநீர் தொட்டிகள்

அமைக்கவும் மற்றும் இதரப்பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான ரூ. 45000/– உத்தேச செலவினம் ஆகும். மேற்கண்டப் பணியை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்கண்டப் பணியை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(0115/26/இ1)

**தீர்மானம் எண். 872**

மன்றம் அனுமதிக்கின்றது.

( 15 ) இந்நகராட்சிப் பகுதிகளின் கழிவுநீர் கால்வாய்களிலுள்ள கழிவு மண்களை அகற்ற நகர் மன்றக் கூட்டத்தில் நகர் மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, நடவடிக்கை எடுக்க ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(378/26/எச்1)

**தீர்மானம் எண். 873**

மன்றம் அனுமதிக்கின்றது.

( 16 ) இராசிபுரம் நகராட்சியின் 2026–2027–ஆம் நிதியாண்டிற்கான வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, ஆரம்ப கல்வி நிதிகளுக்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடு நகர் மன்றத்தின் ஒப்புதலுக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2256/26/பி1)

**தீர்மானம் எண். 874**

மன்றம் அனுமதிக்கின்றது.

( 17 ) இராசிபுரம் நகராட்சியில் உள்ள பொறியியல் பிரிவு ஈப்பு வாகனத்தின் TN 28 CZ 6222 டயர்கள் நான்கும் தேய்ந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதனை புதியதாக மாற்ற வேண்டியது அத்தியாவசிமாகிறது. எனவே புதிய டயர்கள் மாற்றுவதற்கு கீழ்க்கண்ட பணிமனைகளில் விலைப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண் | பணிமனை பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | ஆனந்த் டயர்ஸ், நாமக்கல் | ரூ.34500/- (18% GST உட்பட) |
| 2 | ஸ்ரீ சண்முகா டயர்ஸ், நாமக்கல் | ரூ.34900/- (18% GST உட்பட) |
| 3 | ஸ்ரீ ஏழுமலையான் டயர்ஸ், நாமக்கல் | ரூ.35300/- (18% GST உட்பட) |

எனவே குறைவாக விலைப்புள்ளி அளித்த ஆனந்த் டயர்ஸ், நாமக்கல் அவர்களுக்கு பணியாணை வழங்கி, செலவினத் தொகை ரூ. 34,500/–க்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(0211/26/இ2)

**தீர்மானம் எண். 875**

மன்றம் அனுமதிக்கின்றது.

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.